நாள்: 10.08.2026
OS. 372/2021
பெயர் ராஜா
பி.வா.சா.1

<u>குறுக்கு விசாரணை</u>

நான் கிரையம் வாங்கிய சர்வே எண். 2979ம், 2979/2 முகமது ரபீக், பல்கீஸ் பீவி என்பவரிடமிருந்து 9 செண்ட் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். முகமது ரபீக், பல்கீஸ் பீவி ஆகியோர்கள் யாரிடம் இருந்து கிரையம் பெற்றார்கள் என்றால் தெரியாது. மூலப்பத்திரம் நான் வாங்கவில்லை என்றால் சரிதான், 2 ஆக பிரித்து கொடுத்ததால் மூலப்பத்திரத்தை வாங்கவில்லை. பி.சா.ஆ.3 பீர்சையது இஸ்மாயில் சொத்தை தான் கிரயம் வாங்கியதாக பிசா 1 ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளது. பிசாஆ 3 ஆவணம் சொத்துவிவரத்தில் சர்வே எண். 2979ம், 2979/2 ஆக மொத்தம் 2 ஏக்கர் என விஸ்தீரணம் சொல்லப்பட்டுள்ளது. முகமது ரபீக், பல்கீஸ் பீவி ஆகியோர்கள் 30 செண்ட் நிலத்தினை மேற்படி 2 சர்வே எண்களில் பெற்றார்கள். பீர் சையது இஸ்மாயிலுக்கு வாசாஆ 1 ஆவணப்படி கிடைத்த சொத்தை காட்டக்கூடிய ஆவணம் காட்டச்செய்யப்பட்டுள்ளது என்றால் அது தவறான ஆவணம் ஆகும்.

முகமது ரபீக், பல்கீஸ் பீவி ஆகியோர்கள் கிரையம் வாங்கிய கிரைய ஆவணத்தை நீதிமன்றததில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். முகமது ரபீக், பல்கீஸ் பீவி அவர்கள் வாங்கிய கிரைய ஆவணத்தில் உள்ள எல்கை மாலும் நான் கிரையம் வாங்கிய கிரைய ஆவணமும் தவறு என்றால் சரியல்ல. எனக்கு 9 செண்ட் விற்பனை செய்தது போக மீதமுள்ள 21 செண்ட்ஐ சுமதி என்பவர் கிரையம் பெற்றுள்ளார். சுமதி கிரையம் பெற்ற பின்னர் வாசாஆ 3 ஆவணப்படி சீர்திருத்த ஆவணம் செய்து கொண்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி சீர்திருத்த ஆவணம் செல்லாது என வாதி பரிகாரம் கேட்டுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 10.11.2014 ல் சுமதியும் பீர்சையது இஸ்மாயிலும் சீர்திருத்த ஆவணம் பிறப்பித்துக்கொண்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் தவறான எல்கை மால் கொண்ட 9 செண்ட் இடத்தினை வாங்கி கொண்டு வாதியினுடைய இடத்தை ஆக்கிரமித்துள்ளேன் என்றால் சரியல்ல. சுமதி என் நிலத்திற்கு மேற்கு பக்கம் உள்ளார்கள். நானும் சுமதியும் கிரையம் பெற்றது ஒரே சேர்க்கையாக உள்ள இடம் என்றால் சரிதான். சுமதி பீர் சையது இஸ்மாயிலிடம் சீர்திருத்த ஆவணம் எழுதி வாங்கி எனது நிலத்திற்கு மேற்கு பக்கம் உள்ளார் என்றும், நான் பீர்சையது இஸ்மாயிலிடம் எந்த சீர்த்திருத்த ஆவணமும் பெறமல் தவறான எல்கைகளை ஆக்கிரமித்துள்ளேன் என்றால் சரியல்ல.

சுமதி, முகமது ரபீக், பல்கிஸ் பீவி ஆகியோர்களிடம் எழுதி வாங்கிய சீர்திருத்த ஆவணம் செல்லாது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் கிரையம் வாங்கிய 9 செண்ட் நிலத்தில் 2 1/2 ஜெகதா என்பவருக்கு விற்பனை செய்தேன். அவர் தான் அவருடைய இட்த்தில் ஆழ்துளை கிணறு அமைத்துள்ளார். ஜெகதா ஆழ்த்துளை

கிணறு அமைக்கவில்லை என்றும் வாதி தான் அமைத்தார் என்றால் சரியல்ல. ஜெகதா கிரையம் வாங்கிய இடத்தில் வீடு கட்டி குடியிருந்து வருகிறார். 05.08.2021ல் ஜெகதாவிற்கு கிரையம் கொடுத்தேன். வழக்கு நிலுவையில் இருக்கும் போது தான் ஜெகதாவிற்கு கிரையம் கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் கிரையம் வாங்கிய சொத்தை ஒட்டி வீடுகள் கட்டியுள்ளார்கள். தற்பொழுது அந்த பகுதி வீட்டு மனையாக மாறிவிட்டது என்றால் சரியல்ல. நான் காம்பவுண்ட் சுவர் அமைத்துள்ளேன். அதில் மின் இணைப்பை பெற்றுள்ளேன். வழக்கு தாக்கல் செய்த பின்னர் தான் மின் இணைப்பு பெற்றேன் என்றால் சரியல்ல.

மின் இணைப்பு பெற்ற உத்தரவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. என்னிடம் காட்டப்படுவது போல் நிலத்துண்டுகளை கொண்ட பிளான் உள்ளதா என்றால் நான் கிரையம் வாங்கும்போது எந்த பிளாட்ம் போடப்படவில்லை. என் நிலத்திற்கு அருகில் 20 அடி பாதையில் நிலத்துண்டுகள் பிளாட் அமைக்கப்பட்டுள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பீர்முகமது இஸ்மாயில் 20 அடி பாதையை கோம்பை பேரூராட்சிக்கு எழுதி கொடுத்து அந்த பாதையில் தான் அவரிடம் இருந்து பிளாட்டினை கிரையம் பெற்ற நபர்களுக்கு வடபக்கம் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. நான் கிரையம் வாங்கிய சொத்தில் காட்டப்பட்டுள்ள 20 அடி பொதுப்பாதை வாதிக்கு பாத்தியப்பட்டது என்றும், ஆனால் அதை மறைத்து நான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல.

2012ல் இருந்து நான் கிரையம் பெற்று அனுபவித்து வருகிறேன். 2, 3 பிரதிவாதிகள் சரியான எல்கை மால்களை பொருத்து எனக்கு எழுதி கொடுக்கவில்லை என்றும், நான் கிரையம் வாங்கிய சொத்து அனுபவிக்கும் சொத்தும் வெவ்வேறு என்றால் சரியல்ல. வாதிக்கு உரிமை பெற்ற சொத்தை நான் தவறான எல்கை மாலுடன் கிரையம் வாங்கியதால் வாதி கோரிய பரிகாரம் கிடைக்க வேண்டும் என்றால் சரியல்ல. வாதிக்குபாத்தியப்பட்ட 32, 33,. 34 பிளாட்டை ஆக்கிரமித்து வைத்துள்ளேன் என்றும், எனக்கு உரிமை பட்ட பிளாட் 20, 21,22 என்றால் சரியல்ல. 2 ஏக்கரில் காலியிடமும் உள்ளது என்றால் சரிதான். காலியிடங்களில் தான் எனக்கு உரிமை பட்ட 20,21, 22 பிளாட் உள்ளது என்றும் அங்கு செல்லமல் வாதியின் இடத்தை ஆக்கிரமித்துள்ளேன் என்றால் சரியல்ல. என் இடத்திற்கு அருகில் 2, 3 வீடுகள் உள்ளது யார் வீடு கட்டியுள்ளார்கள் என்று எனக்கு தெரியாது. வாதி கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

M SHIVAJI CHELLIAH
Digitally signed by M SHIVAJI CHELLIAH
Date: 2026.08.10 18:50:47 +0530

சார்பு நீதிபதி

உத்தமபாளையம்